டிரஸ்ட் ஆரம்பித்திட...
புதிதாக டிரஸ்ட், பவுண்டேஷன், கட்சி, ஆசிரமம், சங்கம், மன்றம், கழகம் பதிவு செய்திட தொடர்பு கொள்ளவும்.
பகவான் பவுண்டேஷன்
96004 02096

நல்லவே எண்ணல் வேண்டும்..,
எண்ணிய முடிதல் வேண்டும்..,

# சக்கர வியூகம்

தினசரி நாளிதழ் "தேமதுரத் தமிழோசை உலகமெலாம்" DAILY NEWS PAPER
★SAKKRA VIYUGAM★

இணையத்தில் வாசிக்க..,

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 141 | 15.11.2025 | SATURDAY | IPPASI : 28 | PRICE : RS.5/-
மலர் : 01 | இதழ் : 141 | 15.11.2025 | சனிக்கிழமை | ஐப்பசி : 28 | விலை : ரூ.5/-

3 திருச்சி காந்தி மார்க்கெட்டில் மந்தமாக நடைபெறும் வாழைத்தார் வரத்து அதிகரிப்பு : வியாபாரிகள் வேதனை

4 அமெரிக்காவில் 43 நாட்கள் நீடித்த நிதி முடக்கம் முடிவுக்கு வந்தது: மசோதாவில் கையெழுத்திட்டார் ட்ரம்ப்

2 ராஜபாளையம் அருகே கோயில் கொள்ளை, கொலை வழக்கில் தப்பியோடிய கைதியை சுட்டுப் பிடித்த போலீஸார்

# பிகாரில் மீண்டும் ஆட்சியைப் பிடிக்கிறது தேசிய ஜனநாயகக் கூட்டணி!

பீகார், நவ.15-

பிகார் சட்டப்பேரவைத் தேர்தலில் ஜனதா தளம் தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி 190 இடங்களில் முன்னிலை பெற்று வெற்றியை உறுதி செய்திருக்கிறது.

இதன் மூலம் பாஜக மற்றும் ஜனதா தளம் இணைந்து பிகாரில் மீண்டும் ஆட்சியமைக்கும் என்பது தெளிவாகிறது.

243 தொகுதிகளைக் கொண்ட பிகார் சட்டப்பேரவைக்கு, 122 தொகுதிகளில் பெரும்பான்மை பெற வேண்டிய நிலையில், ஐக்கிய ஜனதா தளம், பாஜக மற்றும் இதர கட்சிகளின் கூட்டணி இணைந்து 190 தொகுதிகளில் முன்னிலை வகித்து, பிகாரில் மீண்டும் தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியைப் பிடிப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. பாஜக மட்டும் 85க்கும் மேற்பட்ட தொகுதிகளில் முன்னிலையில் உள்ளது.

பிகாரில் நடந்த பேரவைத் தேர்தலில் பதிவான வாக்குகள் இன்று காலை முதல் எண்ணப்பட்டு வாக்கு எண்ணிக்கை முடிவுகள் வெளியாகி வருகின்றன. வாக்கு எண்ணிக்கைத் தொடங்கியது முதலே தேசிய ஜனநாயகக் கூட்டணி முன்னிலையில் உள்ளது. முற்பகல் 12 மணி நிலவரப்படி தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இடம்பெற்றுள்ள ஜனதா தளம் 73 தொகுதிகளிலும், பாஜக 84 தொகுதிகளிலும் இதர கட்சிகள் 31 தொகுதிகளிலும் முன்னிலை பெற்று சுமார் 188 தொகுதிகளில் தொடர்ந்து முன்னிலை வகித்து வருகின்றன.



மகாகத்பந்தன் கூட்டணியில் ராஷ்ட்ரிய ஜனதா தளம் 36 தொகுதிகளிலும் காங்கிரஸ் 6 தொகுதிகளிலும் இதர கட்சிகள் 9 தொகுதிகளிலும் முன்னிலைப் பெற்று ஒட்டுமொத்தமாக 51 தொகுதிகளில் முன்னிலையில் உள்ளன.

எனவே, பிகாரில், மீண்டும் பாஜக ஜனதா தளம் கூட்டணி தலைமை யிலான ஆட்சியமையப் போகிறது என்பது முன்னிலை நிலவரங்கள் மூலமாகவே அறியப்படுகிறது.

2020 2025 தேர்தல் முடிவுகள் ஒரு ஒப்பீடு!

கடந்த 2020ஆம் ஆண்டு தேர்தலைக் காட்டிலும் இந்த பிகார் தேர்தல் தேஜ கூட்டணிக்கு மிகப்பெரிய வெற்றியைக் கொடுத்திருக்கிறது என்றே கூறப்படுகிறது.

அதாவது, 2020 சட்டப்பேரவைத் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியமைத்த தேஜ கூட்டணி 37.26 சதவிகித வாக்குகளை மட்டும்தான் பெற்றிருந்தது. எதிர்க்கட்சி வரிசையில் அமர வைக்கப்பட்ட மகாகத்பந்தன் கூட்டணியோ 37.23 சதவிகித வாக்குகளைப் பெற்றிருந்தது.

ஆட்சியமைத்த கட்சியும் எதிர்க்கட்சியும் பெற்றிருந்த வாக்கு வித்தியாசத்தை பார்த்த எவர் ஒருவருக்கும் மிகப்பெரிய ஆச்சரியம் காத்திருக்கும். அதாவது 0.03 சதவீத வாக்குகள் அதிகம் பெற்றிருந்த தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியமைத்தது.

அது மட்டுமல்லாமல் பிகாரில் கடந்த 2020 தேர்தலில், தேசிய ஜனநாயகக் கூட்டணி வேட்பாளர்கள் பெரும்பாலும் 12 ஆயிரம் வாக்குகளுக்கும் குறைவான வித்தியாசத்தில்தான் வெற்றி பெற்றிருந்தனர். குறைவான வாக்குகளில் வெற்றி பெற்றாலும் வெற்றி வெற்றிதானே என்று கேட்கலாம். ஆனால் அந்த வெற்றியிலும், அதாவது தேசிய ஜனநாயகக் கூட்டணி அதிகமாக பெற்ற தொகுதிகள் எவ்வளவு தெரியுமா? வெறும் 15 தொகுதிகள்தான் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆனால், 2025 பேரவைத் தேர்தலில் 12 மணி நிலவரப்படி, பாஜக ஜனதா தளம் தலைமை யிலான கூட்டணி பெற்றிருக்கும் ஒட்டுமொத்த வாக்குகள் 46.18 சதவிகிதம். ஆனால் 35.28 சதவிகித வாக்குகளைத்தான் மகாகத்பந்தன் கூட்டணி பெற்றுள்ளது.

2025 சட்டப்பேரவைத் தேர்தலில், இரு கூட்டணியும் பெற்றிருக்கும் வாக்கு விகிதம் பெரிய அளவில் மாறியிருக்கிறது. இது வாக்கு எண்ணிக்கை முடிவில் முழுமையாக வெளியாகும் என்பதால் எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

12.30 மணி நிலவரப்படி, பாஜக 21.32 சதவிகித வாக்குகளையும் ஜனதா தளம் 18.92 சதவிகித வாக்குகளையும் பெற்றுள்ளன. ராஷ்ட்ரிய ஜனதா தளம் 23.11 சதவிகித வாக்குகளைப் பெற்று, அதிக வாக்குகளைப் பிடித்திருக்கும் கட்சிகளின் வரிசையில் முதலிடத்தில் உள்ளது.



## திருப்பூரில் உங்களுடன் ஸ்டாலின் முகாம்

திருப்பூர், நவ.15-

திருப்பூர் மாநகராட்சி வேலாயுதசாமி திருமண மண்டபத்தில் உங்களுடன் ஸ்டாலின் முகாம் நடைபெற்றது இதில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டு மகளிர் உரிமைத்தொகை.பட்டா சிட்டா மாறுதல். முகவரி மாற்றுதல்.குடிநீர் வரி.மருத்துவம் மற்றும் இ சேவை முகாம் உள்ளிட்ட 40க்கும் மேற்பட்ட துறைகள் சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்ட இந்த விழாவில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டு தங்களது கோரிக்கைகளை மனுவாக எழுதிக் கொடுத்தனர் இந்த நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் எம்எல்ஏ. துணை மேயர் பாலசுப்பிரமணியம், தெற்கு மாநகர செயலாளர் டி கே டி மூ நாகராஜ். 4 வது மண்டல தலைவர் இல.பத்மநாதன்.உதவி ஆணையாளர் பார்த்தசாரதி.மத்திய மாவட்ட திமுக துணை செயலாளர் நந்தினி. திமுக பகுதி கழக செயலாளர்கள் உசேன் பாய்.தம்பி குமாரசாமி.நந்தகோபால்.கோவிந்தராஜ். மாமன்ற உறுப்பினர்கள் கவிதா நேதாஜி கண்ணன்.கணேசன்.மற்றும் துறை சார்ந்த அதிகாரிகளும் ஊர் பொதுமக்களும் பெருந்திரளாக பங்கேற்றனர்....

## சக்கர வியூகம் செய்தி எதிரொலி

பெண் ஊழியருக்கு பாலியல் தொல்லை கொடுத்து வந்த இந்து சமய அறநிலையத்துறை ( HR & CE ) மயிலாடுதுறை மண்டலத்தில் உள்ள ராஜகோபால சுவாமி திருக்கோவிலில் பணிபுரிந்து வந்த, இரண்டாம் நிலை செயல் அலுவலர் கார்த்திகேயன் நாகப்பட்டினம் மண்டலத்திற்கு பணியிட மாற்றம்

## அழையுங்கள்! வாசகர்களே!!

தங்கள் பகுதிகளில் நடக்கும் தாங்கள் காணும் விரும்பத்தகாத செயல்கள், அவலங்கள், சட்டத்திற்கு புறம்பான செயல்பாடுகள், பெண்களுக்கு எதிரான கொடுமைகள் மற்றும் சமூகத்தில் நடக்கும் தங்களால் தட்டிக் கேட்க இயலாத அநீதிகளை எங்களுக்கு உடனுக்குடன் தெரியப்படுத்தவும். (ரகசியம் பாதுகாக்கப்படும்)
(24 x 7)

88705 00000
sakkraviyugam2025@gmail.com

## தமிழ்நாடு முழுவதும் உள்ள 6800 நியாய விலைக் கடைகளுக்கு ரூ.53 கோடி மதிப்பீட்டில் புதிய விற்பனை முனைய இயந்திரம் வழங்கும் விழா

திண்டுக்கல், நவ.15-

கூட்டுறவு, உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை பொது விநியோகத் திட்டம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழிகாட்டுதல்படியும், தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் நல் ஆசியுடனும், தமிழ்நாடு முழுவதும் உள்ள 6800 நியாய விலைக் கடைகளுக்கு ரூ.53 கோடி மதிப்பீட்டில் புதிய விற்பனை முனைய இயந்திரம் வழங்கும் விழா, ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதி, ஒட்டன்சத்திரம் க.ரெ. அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளியில், மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களால் 14.11.2025 (வெள்ளிக்கிழமை)



துவங்கி வைக்கப்பட்டது.

திண்டுக்கல் மாவட்டத்தில் 822 முழு நேர நியாய விலைக் கடைகளும், 482 பகுதி நேர நியாய விலைக் கடைகளும், 122 நகரும் நியாய விலைக் கடைகளும் செயல்பட்டு வருகிறது. ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதியில், 140 முழு நேர நியாய விலைக் கடைகளும்,

120 பகுதி நேர நியாய விலைக் கடைகளும், 6 நகரும் நியாய விலைக் கடைகளும் செயல்பட்டு வருகிறது.

இதில் ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதியில், 16 முழு நேர நியாய விலைக் கடைகள், 91 நேர பகுதி நேர நியாய விலைக் கடைகள் மற்றும் 4 நகரும் நியாய விலைக் கடைகள் என மொத்தம் 111 நியாய விலைக் கடைகள் பொதுமக்கள், அவர்கள் வசிக்கும் பகுதியிலேயே

குடிமைப் பொருட்கள் பெறும் வகையில் புதிதாகப் பிரிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

திண்டுக்கல் மாவட்டத்தில், தற்பொழுது 223 நியாய விலைக் கடைகளுக்கு நவீனப்படுத்தப்பட்ட கைரேகை கருவியுடன் கூடிய புதிய விற்பனை முனைய இயந்திரம் தற்போது வழங்கப்பட்டுள்ளது. முன்னர் 785 நியாய விலைக் கடைகளுக்கு விற்பனை முனைய இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது. ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதியில் 29 நியாய விலைக் கடைகளுக்கு நவீனப்படுத்தப்பட்ட கைரேகை கருவியுடன் கூடிய புதிய விற்பனை முனைய இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது. வெகு விரைவில் அனைத்து நியாய விலைக் கடைகளுக்கும் புதிய விற்பனைமுனைய இயந்திரம் வழங்கப்பட உள்ளது.

## திருச்சி மாவட்ட தலைவர் எல்.ரெக்ஸ் தலைமையில் மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பில் ஜவஹர்லால் நேரு சிலைக்கு மாலை

திருச்சி, நவ.15

சுதந்திரப் போராட்ட வீரர் இந்தியாவின் சிற்பி ,பாரத முதல் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேருவின் பிறந்த நாளை முன்னிட்டு மாநகர் மாவட்ட தலைவர், மாமன்ற உறுப்பினர் எல். ரெக்ஸ் தலைமையில் மாவட்ட பொருளாளர் முரளி, ஜங்ஷன் கோட்ட தலைவர் பிரியங்கா பட்டேல் ஆகியோர் முன்னிலையில் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது. அதனை தொடர்ந்து, குழந்தைகள் தினம்நவம்பர் 14 முன்னிட்டு, திருச்சி மாநகரில் உள்ள பல்வேறு பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்கு நோட்டு புத்தகங்கள் மற்றும் எழுதுகோல்கள் வழங்கப்பட்டது.



நிகழ்வில் சிறுபான்மை பிரிவு முகைதின், தமிழ்நாடு வேதாரணியம் உப்பு சத்தியா கிரக விழிப்புணர்வு இயக்கத்தின் மாநில தலைவர் பூக்கடை பன்னீர், மேலப்புதூர் சத்திய நாதன், அன்பு ஆறுமுகம், கோட்ட தலைவர்கள் காட்டூர் ராஜா டேனியல் ராய்,ஸ்ரீரங்கம் ஜெயம் கோபி, மார்க்கெட் பகதூர்ஷா, அரியமங்கலம் அழகர், உறையூர் பாக்யராஜ், சுப்ரமணியப்புறம் எட்வின், தில்லைநகர் ராகவேந்திரன், மலைக்கோட்டை வெங்கடேஷ் காந்தி,ஏற்போர்ட் கனகராஜ், ரீகன், பொன்மலை பாலு,அணி தலைவர்கள் கலைபிரிவு அருள், எஸ்சி பிரிவு காளியபெருமாள் சிறும்பான்மை பிரிவு மொய்தின், என்ஜிஓ பிரிவு கண்ணன், ஓபிசி ரியாஸ், அமைப்பு சாரா பிரிவு மகேந்திரன், வார்டு நிர்வாகிகள் பூபாலன், வெங்கடேஷ், பாண்டியன், பெல்ட் சரவணன், கண்ணன், விஜி, கனகஜோதி, ஆனந்த பத்திபநாதன், வித்தியாதரன், நூர் அகமது, ரவிசுந்தரம், பெரியசாமி, சம்பத், சையது,சரவணன், எழில் மற்றும் பல நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

விளம்பரம் மற்றும் செய்திகள்
தொடர்புக்கு : 88705 00000

# தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புமிகு திட்டங்களால் தமிழக மாணவர்கள் கல்வி மற்றும் விளையாட்டு துறையில் உலக அளவில் சாதனைபடைத்து வருகிறார்கள் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பெருமிதம்

## சித்தையன்கோட்டை அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற 62 மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார்

## ஆத்தூர் தொகுதியில் 5 ரேசன்கடை பணியாளர்களுக்கு கைரேகை கருவியுடன் கூடிய விற்பனை முனைய இயந்திரம் வழங்கப்பட்டது







சின்னாளபட்டி, நவ.15

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புமிகு திட்டங்களால் தமிழக மாணவர்கள் கல்வி மற்றும் விளையாட்டு துறையில் உலக அளவில் சாதனைபடைத்து வருகிறார்கள் என்று சித்தையன்கோட்டை அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற 62 மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் விழாவில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பெருமிதமாக பேசியதோடு ஆத்தூர் தொகுதியில் 5 ரேசன்கடை பணியாளர்களுக்கு கைரேகை கருவியுடன் கூடிய விற்பனை முனைய இயந்திரத்தை வழங்கினார்.

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட அரசு மேல்நிலைப்பள்ளியில் ஆத்தூர் தொகுதியை சேர்ந்த பள்ளி மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் விழாவிற்கு மாவட்ட ஆட்சியர் செ.சரவணன் தலைமை தாங்கினார். மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் உஷாநந்தினி, மண்டல இணைப்பதிவாளர் ஸ்ரீராகவ் பாலாஜி, திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், ஒன்றிய செயலாளர்கள் பிள்ளையார்நத்தம் முருகேசன், பாறைப்பட்டி ராமன், பேரூராட்சி செயல் அலுவலர் ஜெயமாலு, பேரூராட்சிமன்ற தலைவர் போதும்பொன்னு முரளி, துணைத்தலைவர் ஜாகீர் உசேன், பெற்றோர் ஆசிரியர் கழகத்தலைவர் ரபீக் மைதீன், சிறுபான்மையினர் நல அணியை சேர்ந்த வழக்கறிஞர் செல்லமரக்காயர், ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் சுகுமார் வரவேற்று பேசினார். மாவட்ட ஆட்சியர் செ.சரவணன் அவர்கள் பேசும்போது திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள பள்ளி மாணவர்கள் நலன் கருதி ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளி கட்டிடங்களையும் புதுப்பித்து கொடுத்துள்ளார். ஸ்மாட் கிளாஸ் வகுப்பறைகளும் கட்டிக்கொடுத்துள்ளார். இதன் மூலம் மாணவர்களின் கல்வித்தரம் உயர்ந்திருப்பதோடு மாணவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது என்றார். மாணவர்கள் மத்தியில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் பேசும்போது திராவிடமாடல் ஆட்சி நாயகர் கழகத்தலைவர் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் மற்றும் மாண்புமிகு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சிறப்புமிகு திட்டங்களால் தமிழக மாணவர்கள் இந்தியா மற்றும் உலக அளவில் கல்வி மற்றும் விளையாட்டு துறையில் சாதனை படைத்துள்ளார்கள். ஆத்தூர் தொகுதியை பொறுத்தவரை ஏழை மாணவர்களின் நலன் கருதி அனைத்து நடுநிலைப்பள்ளிகளும் உயர்நிலைப்பள்ளிகளாவும், உயர்நிலைப்பள்ளிகள் மேல்நிலைப்பள்ளிகளாகவும் மாற்றப்பட்டுள்ளன. இதுதவிர கடந்த திமுக ஆட்சியின் போது ஆத்தூர் தொகுதி ரெட்டியார்சத்திரத்தில் அறிஞர் அண்ணா பொறியியல் கல்லூரி கொண்டுவரப்பட்டது. இப்போது ஆத்தூர் ஒன்றியத்தில் கூட்டுறவுத்துறை சார்பாக ரூ.100கோடி மதிப்பில் கலை மற்றும் அறிவியல் கல்லூரியும், ரெட்டியார்சத்திரம் ஒன்றியத்தில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி கொண்டுவரப்பட்டது. ஆத்தூர் கூட்டுறவு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 1400 மாணவ மாணவியர் படிக்கின்றனர். இவர்களுக்கு கல்விக்கட்டணம் எதுவும் கிடையாது முன்பு உயர்கல்வி கற்கவேண்டுமென்றால் மதுரை அல்லது திண்டுக்கல்லுக்குதான் செல்ல வேண்டும் இப்போது உங்கள வீட்டருகே நீங்கள் கல்வி கற்கும் நிலைமை உருவாகியுள்ளது. அதற்கு காரணம் திராவிட மாடல் ஆட்சிதான் என்றார். இப்போதுகூட இந்த பள்ளியில் உயர்தரத்துடன் 5 வகுப்பறைகள் கட்டப்பட்டு வருகின்றன. என்றதோடு தமிழக முதல்வர் செயல்படுத்திவரும் அனைத்து நலத்திட்டங்களும் மாணவர்களின் கல்வியை முன்னிறுத்தி செயல்படுத்தி வருவதால் உலக அளவில் தமிழக மாணவர்கள் கல்வியிலும், விளையாட்டு துறையிலும் சாதனைபடைத்து வருகிறார்கள். குறிப்பாக ஒன்றை சொல்ல வேண்டுமென்றால் 1கோடி மாணவர்கள் விளையாட்டுதுறையில் ஈடுபட துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வைத்துள்ளார் அதற்கு எனது மனமார்ந்த பாராட்டுகள் என்றார்.இப்போது பள்ளி ஆசிரியர் நாடகமேடையும், பேவர்பிளாக் கற்கள் சாலையும் கேட்டுள்ளார். உடனடியாக அந்த பணிகள் தொடங்கப்படும் என்றார். அப்போது அங்கு கூடியிருந்த நூற்றுகணக்கான மாணவர்கள் மகிழ்ச்சியில் கைதட்டி ஆரவாரம் செய்தனர். கல்வி ஒன்றுதான் நம்மிடம் இருந்து பிரிக்கமுடியாத சொத்து அதை உணர்ந்து நீங்கள் அனைவரும் உயர்கல்வி கற்று மேல்நிலையை அடைய வேண்டுமென இந்த குழந்தைகள் தினத்தில் உங்களை வாழ்த்துகிறேன் என்றார். விழாவை தொடர்ந்து ஆத்தூர் தொகுதியில் 5 ரேசன்கடை பணியாளர்களுக்கு கைரேகை கருவியுடன் கூடிய விற்பனை முனைய இயந்திரத்தை வழங்கினார். நிகழ்ச்சியில் கிழக்கு மாவட்ட தி.மு.க. பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, ஆத்தூர் வட்டாட்சியாகள்; முத்துமுருகன், தனுஷ்கோடி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் முருகன், பத்மாவதி, வட்ட வழங்கல் அலுவலர் பிரவீனா, கூட்டுறவு சார்பதிவாளர் அறிவழகன், முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் பாஸ்கரன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மணலூர் மணிகண்டன், ஆத்தூர் மேற்கு ஒன்றிய திமுக அவைத்தலைவர் காணிக்கை சாமி, பேரூராட்சி மன்றதலைவர் ரேகா அய்யப்பன், சித்தையன்கோட்டை பேரூராட்சி செயலாளர் சக்திவேல், துணைச்செயலாளர் அலாவுதீன், பேரூராட்சி மன்ற முன்னாள் துணை தலைவர் தங்கபாண்டி முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் நாக லெட்சுமி சசிகுமார், திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஷ், பேரூராட்சி தலைமை எழுத்தர் கவின், வார்டு உறுப்பினர்கள் லாவண்யா சுரேஷ், தியாகு, பபிதா பானு, பேரூராட்சி துப்புரவு ஆய்வாளர் அபுபக்கர், குழாய் பொருத்துநர் ஜெயராஜ், கணிணி ஆப்ரேட்டர் பாலா, மற்றும் திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## நித்யானந்தா ஆசிரமங்களில் இருந்து சீடர்களை வெளியேற்றும் உத்தரவுக்கு உயர் நீதிமன்ற மதுரை அமர்வு தடை



மதுரை, நவ.15-

ராஜபாளையத்தில் நித்யானந்தா ஆசிரமங்களில் இருந்து, அவரது சீடர்களை வெளியேற்றும் உத்தரவை ரத்து செய்து உயர் நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

நித்யானந்த தியான பீட அறங்காவலர் சந்திரசேகரன், உயர் நீதி மன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனுவில் கூறியிருப்பதாவது: ராஜபாளையம் அருகே சேத்தூர் மற்றும் கோதைநாச்சியாபுரம் கிராமத்தில் உள்ள மருத்துவர் கணேசன் என்பவருக்குச் சொந்தமான இடத்தில் நித்யானந்தா ஆசிரமங்கள் செயல்பட்டு வந்தன.

இந்த ஆசிரமங்களில் தங்கியுள்ள பெண் சீடர்களை வெளியேற்றுமாறு கோட்டாட்சியர் உத்தரவு பிறப்பித்தார். இந்த உத்தரவின் பேரில் நித்யானந்தா ஆசிரமங்களில் உள்ள பெண் சீடர்களை வெளியேற்ற ராஜபாளையம் டிஎஸ்பி நடவடிக்கை எடுத்து வருகிறார். கோட்டாட்சியர் உத்தரவுக்கு எதிரான வழக்கு நிலுவையில் இருக்கும்போது, ஆசிரமங்களில் இருந்து யாரையும் வெளியேற்றக்கூடாது.

எனவே, நித்யானந்தாவின் சீடர்களை ஆசிரமங்களில் இருந்து வெளியேற்றும் கோட்டாட்சியரின் உத்தரவை ரத்து செய்து உத்தரவிட வேண்டும். இவ்வாறு மனுவில் கூறப்பட்டிருந்தது. இந்த மனுவை விசாரித்த நீதிபதி எல்.விக்டோரியா கௌரி, நித்யானந்தாவின் ஆசிரமங்களிலிருந்து, அவரது சீடர்களை வெளியேற்றுவது தொடர்பாக கோட்டாட்சியர் பிறப்பித்த உத்தரவை ரத்து செய்து உத்தரவிட்டார்.

## கான்பூர் மருத்துவரிடம் உ.பி. போலீஸார் விசாரணை



கான்பூர், நவ.15-

டெல்லி குண்டுவெடிப்பு வழக்கு தொடர்பாக கான்பூரைச் சேர்ந்த மருத்துவரைப் பிடித்து உத்தரபிரதேச மாநில போலீஸார் விசாரித்து வருகின்றனர்.

டெல்லி செங்கோட்டை அருகே கடந்த 10ம் தேதி காரில் குண்டு வெடித்ததில் 13 பேர் உயிரிழந்தனர். இந்த வழக்கை விசாரித்து வரும் தேசிய விசாரணை முகமை(என்ஐஏ) போலீஸார் பலரைப் பிடித்து விசாரித்து வருகின்றனர். இந்நிலையில் டெல்லி குண்டிவெடிப்புடன் தொடர்புடையதாக உத்தரபிரதேச மாநிலம் கான்பூரைச் சேர்ந்த ஜிஎஸ்விஎம் மருத்துவக் கல்லூரியில் பயின்று வரும் டாக்டர் முகமது ஆரிப்பை(32) தீவிரவாத எதிர்ப்புப் படை போலீஸார் பிடித்து விசாரித்து வருகின்றனர்.

இவர் எம்பிபிஎஸ் படித்து முடித்த நிலையில், மருத்துவ மேல்படிப்பு(கார்டியாலஜி) படித்து வருகிறார். அவரது செல்போன், லேப்டாப் உள்ளிட்டவற்றை போலீஸார் பறிமுதல் செய்து ஆய்வு செய்து வருகின்றனர்.

இந்த வழக்கில் கைது செய்யப்பட்டவர்களுக்கும் இவருக்கும் தொடர்புடையதாக போலீஸார் தெரிவித்துள்ளனர். டாக்டர் முகமது ஆரிப், ஜம்முகாஷ்மீரின் அனந்த்நாக் பகுதியைச் சேர்ந்தவர். இந்த வழக்கில் ஏற்கெனவே கைது செய்யப்பட்டுள்ள டாக்டர் ஷாஹீன் சயீதுடன் இவர் நெருங்கிய தொடர்பில் இருந்துள்ளார்.

மேலும் டெல்லி செங்கோட்டை குண்டுவெடிப்பு சம்பவம் நடந்தபோது, டாக்டர் ஷாஹீனுடன் தொடர்பில் உள்ளவர்களுடன் டாக்டர் ஆரிப் செல்போனில் பேசி வந்துள்ளதும் தெரியவந்துள்ளது. இவர் தற்போது டெல்லிக்குக் கொண்டு வரப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகிறார்.

வீட்டு மாடியில் மனித கை: டெல்லி செங்கோட்டை அருகே குண்டுவெடிப்பு சம்பவம் நடந்த 4 நாட்களான நிலையில் நேற்று மனிதக் கை ஒன்று குண்டு வெடித்த இடத்தில் கிடைத்துள்ளது. குண்டுவெடித்த இடம் அருகே உள்ள ஜெயின் கோயிலுக்கு பின்புறமுள்ள ஒரு வீட்டின் மேற்பகுதியில் இருந்து இந்த சிதிலமான கை கண்டெடுக்கப்பட்டது. இதையடுத்து என்ஐஏ அதிகாரிகள் அதைக் கைப்பற்றி, ஆய்வகத்துக்கு அனுப்பி வைத்துள்ளனர். அந்த கை யாருடையது என்பது குறித்து தடயவியல் அறிவியல் நிபுணர்கள் ஆய்வு செய்து வருகின்றனர்.



## ட்ரெய்லர் வாகனத்தில் விமானம் எடுத்து செல்லப்பட்டது

புதுக்கோட்டை, நவ.15-

கீரனூர் அருகே நேற்று முன்தினம் சாலையில் தரையிறங்கிய பயிற்சி விமானம் எடுத்துச் செல்லப்பட்டது. கீரனூர் அருகே அம்மா சத்திரத்தில் பயிற்சி விமானம் நேற்று சாலையில் தரையிறங்கியது. கிரேன் மற்றும் 10 தொழில்நுட்ப வல்லுநர்கள் உதவியுடன் ட்ரெய்லர் வாகனத்தில் விமானம் எடுத்துச் செல்லப்பட்டது. சேலத்தில் இருந்து வந்த பயிற்சி விமானம் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக அம்மாசத்திரத்தில் தரையிறக்கம் செய்யப்பட்டது. தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்ட நிலையில் விமானி சாதுர்யமாக செயல்பட்டு சாலையில் தரையிறக்கினார்

## சர்க்கரை ஆலைக்கு கரும்பு அனுப்ப முடியாததால் காய்ந்து வீணான 50 டன் கரும்புகள்: விவசாயி வேதனை

திருவள்ளூர், நவ.15-

திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு கரும்பு அனுப்ப முடியாததால், 50 டன் கரும்பு காய்ந்து வீணாகும் அவலம் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் குற்றச்சாட்டு சாட்டியுள்ளனர். திருவள்ளூர் மாவட்டம், திருவாலங்காட்டில் உள்ள திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் நடப்பு 202526ம் ஆண்டு அரைவைப் பருவத்திற்கு 2051 விவசாயிகளிடமிருந்து 7505 ஏக்கர் கரும்பு, ஆலைக்கு பதிவு செய்யப்பட்டு 2 லட்சம் மெட்ரிக் டன்கள் கரும்பு அரைவை செய்திட திட்டமிடப்பட்டுள்ளதாக மாவட்ட நிர்வாகம் சார்பில் அறிவிக்கப்பட்டது. இதனையடுத்து, கரும்பு விவசாயிகள் முன்பதிவு செய்தனர். பதிவு செய்ததின் அடிப்படையில் கரும்பு விவசாயிகளிடமிருந்து வாகனம் மூலம் கரும்பை பெற்று வருகின்றனர்.

இந்நிலையில், திருவள்ளூர் அடுத்த ஈக்காடு பகுதியை சேர்ந்த கார்த்திகேயன் என்ற கரும்பு விவசாயி, தனது 5 ஏக்கர் பரப்பளவில் கரும்பு சாகுபடி செய்துள்ளார். கடந்த 7ம்தேதி கரும்பை அரவைக்கு தயாராக வைத்திருக்க ஏதுவாக வெட்டி தயார் நிலையில் வைத்திருக்குமாறு ஆலை நிர்வாகம் சார்பில் தெரிவித்துள்ளனர். இதனால், கூலி ஆட்களைக் கொண்டு கிட்டத்தட்ட 4 நாட்களாக 50 டன் எடை கொண்ட கரும்பை வெட்டியுள்ளனர். ஆனால், திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலையிலிருந்து வாகனத்தை அனுப்பி கரும்பை எடுத்துச் செல்லாததால், 50 டன் கரும்பு காய்ந்து போனது. கடன் வாங்கி கரும்பு பயிர் செய்த நிலையில், அதிகாரிகளின் அலட்சியத்தால் கரும்பு வீணாவதாக விவசாயி கார்த்திகேயன் குற்றம் சாட்டினார்.

250 டன் கரும்பு தருவதாக பதிவு செய்த நிலையில், 50 டன் கரும்பு காய்ந்து போனதால் விரக்தியடைந்த விவசாயி கார்த்திகேயன் ஆலை நிர்வாகத்திடம் பேச முயன்றபோது, யாரும் பதிலளிக்கவில்லை என கூறப்படுகிறது. முறையாக நிர்வாகம் செய்யாததும், இதுபோன்ற குளறுபடிக்கு காரணம் என்றும் குற்றம் சாட்டினார். மேலும், ஆந்திராவில் இருந்தும் கரும்பை பெறும் ஆலை நிர்வாகம் திருவள்ளூர் மாவட்ட விவசாயிகளிடமிருந்து கரும்பை பெறாதது ஏன் என்றும் குற்றம் சாட்டினர்.



## தேமுதிக இடம்பெறும் கூட்டணிக்கே வெற்றி - பிரேமலதா விஜயகாந்த் உறுதி

சென்னை, நவ.15-

தேமுதிக அங்கம் வகிக்கும் கூட்டணி 2026 சட்டப்பேரவைத் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சி அமைக்கும் என்று தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.

தேமுதிக மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் அக்கட்சியின் பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் தலைமையில் சென்னை கோயம்பேட்டில் உள்ள தலைமை அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. இதில், தேமுதிக பொருளாளர் எல்.கே.சுதீஷ், தலைமை நிலையச் செயலாளர் பார்த்தசாரதி, மாவட்டச் செயலாளர்கள் உள்ளிட்ட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். இந்த கூட்டம் சுமார் 3 மணி நேரம் நடைபெற்றது. இதில் தேர்தல் களப்பணிகள், கூட்டணி நிலவரம், மாநாடு ஏற்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து விவாதிக்கப்பட்டன. மேலும், தேர்தல் கூட்டணி நிலைப்பாட்டில் மாவட்டச் செயலாளர்கள் மத்தியில் கலவையான கருத்துகள் பகிரப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

கூட்டம் முடிந்த பின்னர் பிரேமலதா செய்தியாளர்களிடம் கூறியதாவது: தேமுதிகவின் அடுத்தகட்ட நகர்வுகள், வளர்ச்சி குறித்தும், பல முக்கியமான கருத்துகள் குறித்து இன்றைய கூட்டத்தில் கலந்து ஆலோசித்துள்ளோம். எஸ்ஐஆர் பற்றி தற்போது பெருமளவில் பேசப்பட்டு வருகிறது. எதுவாக இருந்தாலும் தேமுதிக 2026 சட்டப் பேரவைத் தேர்தலில் சந்திக்கத் தயாராக இருக்கிறது. வாக்காளர் பட்டியலில் தேமுதிகவினரின் வாக்குகள் நீக்கப்படாமல் இருப்பது குறித்து கண்காணிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனது 4ம் கட்ட சுற்றுப் பயணம் கன்னியாகுமரியில் தொடங்கி விருதுநகரில் முடிவடைகிறது.

தமிழகத்தில் நடைபெறும் மக்கள் பிரச்சினைகள் அனைத்தையும் கவனித்து அறிக்கை தருவதுடன் அந்தக் களத்துக்கு சென்று பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவு கொடுப்பதிலும் தேமுதிக முதல் கட்சியாக செயல்பட்டிருக்கிறது. கூட்டணி விவகாரத்தில் தமிழகத்துக்கும், மக்களுக்கும் பலன் தரக்கூடிய அளவில் சிந்தித்து நல்ல முடிவு எடுப்போம். அதன்படி தேமுதிக யாருடன் கூட்டணி என்பது ஜனவரி 9ம் தேதி நடைபெற உள்ள 'மக்களை மீட்போம்' மாநாட்டில் அறிவிக்கப்படும்.

கூட்டணிப் பேச்சுவார்த்தையில் எந்த ரகசியமும் கிடையாது. இந்த சட்டப் பேரவை தேர்தலில் மிக பிரம்மாண்டமான கூட்டணி அமையும். தேமுதிக அங்கம் வகிக்கும் அந்தக் கூட்டணி 2026 தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சி அமைக்கும். தேமுதிக அங்கீகரிக்கப்பட்ட கட்சி. அதனால் முரசு சின்னத்தில் தான் எங்களது வேட்பாளர்கள் போட்டியிடுவார்கள். வட மாநிலத்தில் இருந்து வருபவர்கள் பணி நிமித்தம் வந்தாலும் இங்கு வாக்காளராக ஆக முடியாது. தங்கள் பிறந்த மாநிலத்தில் வாக்களிப்பதுதான் சரியாக இருக்கும். எஸ்ஐஆர் திருத்தம் தொடர்பாக தேர்தல் ஆணையமும், மாநில அரசும் தான் மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும். இந்த தேர்தலில் தவெக

திமுக இடையேதான் போட்டி என்ற விஜய் கருத்துக்கு பதில் கூற முடியாது. நாங்கள் 20 ஆண்டுகளாக கட்சி நடத்தி வருகிறோம். இவ்வாறு அவர் கூறினார்.



■ திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறை, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகம் சார்பில் தேசிய குழந்தைகள் தினம் மற்றும் சர்வதேச குழந்தைகள் உரிமைகள் தினம், உலக குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகள் தடுப்பு தினம் குறித்து விழிப்புணர்வு பேரணியும் அதனை தொடர்ந்து உறுதிமொழியும் திண்டுக்கல் மாவட்ட துணை ஆட்சியர் முன்னிலையில் அதிகாரிகள் எடுத்துக் கொண்டனர்.



■ மதுரை மாவட்டம், திருமங்கலம் ஊராட்சி ஒன்றியம், உச்சப்பட்டி ஊராட்சியில் உள்ள நடுநிலைப்பள்ளியில் தேசிய குழந்தைகள் தினத்தை நிகழ்ச்சியில், பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவமாணவிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் பரிசுகளை வழங்கி பாராட்டினார்.



■ திருச்சி வடக்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பில் ஜவகர்லால் நேரு சிலைக்கு மாலை மாவட்டத் தலைவர் திருச்சி கலை தலைமையில் நிர்வாகிகள் பங்கேற்பு. முன்னாள் பிரதம பண்டித ஜவஹர்லால் நேருவின் பிறந்த நாளையொட்டி திருச்சி வடக்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பில் மாவட்ட தலைவர் திருச்சி கலை தலைமையில் நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இந்நிகழ்வில் மாநில பொதுக்குழு உறுப்பினர் வக்கீல் மோகனாம்பாள்,பஞ்சாயத்து ராஜ் மண்டல இணை ஒருங்கிணைப்பாளர் கண்ணன், நிர்வாகிகள் சத்யநாதன், ராஜேஷ், சபியுல்லா, தனபால் , ரகமத்துல்லா, ஜோதி, ராணி, பரமேஸ்வரி , ரெங்கராஜன், சாந்தகுமார், சுப்பிரமணி , சக்திவேல் மற்றும் திரளான நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



■ மதுரை தமுக்கம் மைதானத்தில் அகில இந்திய அளவிலான சரஸ் மேளா நடைபெறவுள்ளதை முன்னிட்டு முன்னேற்பாடு பணிகள் குறித்து பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் ஆய்வு செய்து பார்வையிட்டார்.



## பொதும்பு அரசு பள்ளியில் விலையில்லா இலவச மிதிவண்டிகளை நாடாளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்ச்செல்வன், சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன் வழங்கினர்

அலங்காநல்லூர், நவ.15-

மதுரை மேற்கு ஒன்றியம் பொதும்பு ஊராட்சி அரசு மேல்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவ மாணவிகளுக்கு அரசின் விலையில்லா இலவச மிதிவண்டி வழங்கும் விழா நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு தேனி நாடாளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்ச்செல்வன், சோழவந்தான் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன்,ஆகியோர் கலந்து கொண்டு மாணவ மாணவியருக்கு இலவச மிதிவண்டிகளை வழங்கி னார்கள். முன்னதாக பள்ளி வளாகத்திற்குள் புதிதாக கட்டப்பட்டு வரும் கட்டிட ங்கள் சமையலறை மற்றும் பள்ளி வகுப்பறைகளை பார்வையிட்ட ஆய்வு செய்து ஆசிரியர்களிடம் குறைகளை கேட்டு அறிந்தனர். இதில் மாவட்ட கல்வி அலுவலர் ரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை சண்முக வடிவேல், திமுக ஒன்றிய செயலாளர் தனசேகர், வயலூர் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் பார்த்தசாரதி, மற்றும் நிர்வாகிகள் முருகன், செல்லமுத்து உள்பட அரசு அதிகாரிகள் பள்ளி ஆசிரியர்கள் மாணவ மாணவிகள் திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



■ சென்னையிலிருந்து விமானம் மூலம் திருச்சிவிமானநிலையத்திற்கு வருகை புரிந்த தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினை, அமைச்சர் கே.என்.நேரு, அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மாவட்ட ஆட்சித்தலைவர் வே.சரவணன் ஆகியோர் பொன்னாடை மற்றும் பூங்கொத்து வழங்கி வரவேற்ற காட்சி.



■ திண்டுக்கல் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் திண்டுக்கல் மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணி தொடர்பான மனித சங்கிலி விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.



■ சென்னையிலிருந்து விமானம் மூலம்திருச்சி விமானநிலையத்திற்கு வருகை புரிந்த தமிழ்நாடுதுணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினை மாவட்டஆட்சித்தலைவர்வே. சரவணன்,பூங்கொத்து வழங்கி வரவேற்ற காட்சி.

## நலம் காக்கும் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் இராயப்பன்பட்டி செயின்ட் அலோசியஸ் கல்வி நிறுவனத்தில் உயர் சிறப்பு மருத்துவ முகாம்



தேனி, நவ.15-

தேனி மாவட்டம் உத்தமபாளையம் வட்டாரம், இராயப்பன்பட்டியில் உள்ள செயின்ட் அலோசியஸ் கல்வி நிறுவனத்தில் 15.11.25 காலை 09.00 மணி முதல் மாலை 04.00 வரை நடைபெறவுள்ளது.

இம்முகாம்களில் அடிப்படை மற்றும் உயர்நிலை மருத்துவப் பரிசோதனைகளுடன் முழுமையான உடல் ஆரோக்கியப் பரிசோதனைகளும் (உயர் இரத்த அழுத்தம். நீரிழிவு நோய், மின் இதய வரைபடம். எக்கோ, அல்ட்ராசவுண்ட் ஸ்கேன், எக்ஸ்ரே முதலியவை) காசநோய் மற்றும் தொழுநோய் கண்டறியும் பரிசோதனைகளும் ஆரம்ப கட்ட புற்றுநோய் கண்டறியும் பரிசோதனைகளும். மேலும் 15 துறைகளைச் சார்ந்த மருத்துவ நிபுணர்களின் ஆலோசனைகளும் (பொது மருத்துவம், அறுவை சிகிச்சை, இதயவியல் உள்ளிட்ட துறைகள்) வழங்கப்படுகிறது.

மேற்கண்ட பரிசோதனைகள் மட்டுமின்றி தமிழ்நாடு முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் பதிவு செய்தல், மாற்றுத் திறனாளிகளுக்கான அரசு அங்கீகாரச் சான்றிதழ் வழங்குதல் உள்ளிட்ட சேவைகளும் வழங்கப்படுகிறது.

எனவே. மருத்துவ பரிசோதனை தேவைப்படுவோர் நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாமினை பயன்படுத்திக்கொள்ளலாம் என்ன மாவட்ட ஆட்சியர் ரஞ்சித் சிங் தெரிவித்துள்ளார்.



## செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூர் அருகே வெடித்துச் சிதறிய சிறிய ரக விமானம்

செங்கல்பட்டு, நவ.15-

செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூர் அருகே சிறிய ரக விமானம் வெடித்துச் சிதறியது. அதிக சத்தத்துடன் விமானம் வெடித்துச் சிதறியதாக நேரில் பார்த்தவர்கள் தகவல் தெரிவித்தனர். விமானம் வெடித்துச் சிதறிய நிலையில் பயணித்த விமானிகள் உயிர்தப்பினர். பாராசூட் மூலம் விமானிகள் உயிர்தப்பிய நிலையில் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.



## திண்டுக்கல் மாவட்டத்தில் தேசிய குழந்தைகள் தினம் மற்றும் சர்வதேச குழந்தைகள் உரிமைகள் தினம்

திண்டுக்கல், நவ.15-

விழிப்புணர்வு பேரணியை வினோதினி உதவி ஆட்சியர் (பயிற்சி) மற்றும் ஜெயசுதா உறுப்பினர் தமிழ்நாடு குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் ஆகியோர்கள் இணைந்து துவங்கி வைத்தனர். குழந்தைகள் தின விழாவை முன்னிட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இருந்து விழிப்புணர் பேரணியாக அஞ்சலி ரவுண்டானா வழியாக சென்று மீண்டும் மாவட்ட ஆட்சியர் அலுவலக த்திலேயே முடிவ டைந்தது. இப்பேரணியில் சிறப்பு சிறார் காவல் அலகு, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றம் தடுப்பு பிரிவு, மாவட்ட சமூக நலத்துறை பணியாளர்கள், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலக பணியாளர்கள், குழந்தை உதவி மையத்தின் உடைய பணியாளர்கள் மற்றும் தனியார் தொண்டு நிறுவன பணியாளர்கள் என மொத்தம் 200க்கும் மேற்பட்டோர் பேரணியில் கலந்து கொண்டனர். சத்யநாராயணன் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் பேரணியில் கலந்து கொண்ட அனைவரையும் வரவேற்று பேசினார். இப்பேரணியின் ஏற்பாடுகளை ஜெரோம் சிறப்பு சிறார் காவல் அலகு அவர்கள் சிறப்பான முறையில் நடத்தினார்.



■ திண்டுக்கல் நேருஜி நினைவு நகராட்சி மேல்நிலைப் பள்ளியில் புதிதாக கட்டி முடிக்கப்பட்ட கூடுதல் வகுப்பறை கட்டிடங்கள் மற்றும் மாணவர்கள் பயன்படுத்த கழிப்பறை கட்டிடங்களை மேயர் இளமதி ஜோதி பிரகாஷ் திறந்து வைத்தார். இதில் துணை மேயர் ராஜப்பா,மாநகராட்சி ஆணையாளர்,மண்டலத் தலைவர்கள் பிலால் உசேன், ஜான் பீட்டர் மற்றும் பள்ளி தலைமை ஆசிரியர், ஆசிரியைகள் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

## தனியார் பேருந்துகளின் கட்டண உயர்வு தொடர்பான வழக்கு: தமிழக அரசு நீதிமன்றத்தில் விளக்கம்

சென்னை, நவ.15-

தனியார் பேருந்துகளின் கட்டண உயர்வு குறித்து டிசம்பர் 30ம் தேதிக்குள் முடிவெடுக்கப்படும் என தமிழ்நாடு அரசு சென்னை உயர் நீதிமன்றத்தில் தெரி வித்துள்ளது.



தமிழ்நாடு பேருந்து ஆபரேட்டர்கள் சங்க ங்களின் கூட்டமைப்பின் சார்பில் அதன் செயலாளர் தாக்கல் செய்திருந்த மனுவில், ”டீசல் விலை உயர்வு மற்றும் அரசு வழங்கியுள்ள இலவச பயண பாஸ்கள் உள்ளிட்ட பல காரணிகளால் பேருந்து கட்டணத்தை உயர்த்த வேண்டும் என தமிழக அரசு மற்றும் போக்குவரத்து துறை ஆணையர் ஆகியோரிடம் மனு அளித்ததாக குறிப்பிட்டுள்ளார். அந்த கோரிக்கை மனுவின் அடிப்படையில், தனியார் பேருந்து கட்டணத்தை மாற்றியமைக்க அரசுக்கு உத்தரவிட வேண்டுமென கோரிக்கை வைத்திருந்தார்.

2024 டிசம்பர் 6ம் தேதி பிறப்பிக்கப்பட்ட அரசாணைப்படி, உள்துறை கூடுதல் தலைமைச் செயலாளர், போக்கு வரத்துத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர், நிதித்துறை முதன்மைச் செயலாளர் ஆகியோரை உறுப்பினார்களாக கொண்ட உயர்மட்ட குழு அமைக்கப்பட்டதாகவும், தனியார் பேருந்து உரிமையாளர்களுடனான கூட்டம் கடந்த மார்ச் மாதம் நடத்தப்பட்டது. தனியார் பேருந்து உரிமை யாளர்களின் கருத்தகளை அனுப்பச் சொன்ன நிலையில் அதன் பின்னர் எந்த நடவடி க்கையும் இல்லை” என்று மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வழக்கு நீதிபதி வி.லட்சுமி நாராயணன் முன்பு விசாரணைக்கு வந்தபோது, தமிழக அரசு தரப்பில் அரசு கூடுதல் தலைமை வழக்கறிஞர் ஹாஜா நசிருதீன் மற்றும் அரசு சிறப்பு வழக்கறிஞர் ஷாஜஹான் ஆகியோர் ஆஜராகி இதுவரை 950 பரிந்துரைகள் வந்துள்ளதாக.” தெரி வித்தனர்.

மேலும் இந்த கோரிக்கைகளை ஆய்வு செய்வதற்கான கூட்டத்தை நடத்தி இறுதி உத்தரவு டிசம்பர் 30ம் தேதிக்குள் பிறப்பிக்கப்படும்” என்று வழக்கறிஞர்கள் இருவரும் உறுதியளித்தனர்.

அரசின் உத்தரவா தத்தை பதிவு செய்த நீதிபதி, வழக்கை முடித்துவைத்ததுடன், அரசு எடுக்கும் இறுதி முடிவை 2026 ஜனவரி 6ம் தேதி தாக்கல் செய்ய உத்தரவிட்டுள்ளார்.

# தேர்தல் ஆணையத்தை கண்டித்து நவ.16ல் தவெக ஆர்ப்பாட்டம்: விஜய் பங்கேற்பதாக தகவல்



சென்னை, நவ.15-

தேர்தல் ஆணையத்தை கண்டித்து தவெக சார்பில் வரும் 16ம் தேதி தமிழகம் முழுவதும் மாவட்ட தலைநகரங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது. இதில், அக்கட்சியின் தலைவரான நடிகர் விஜய் கலந்து கொள்ள உள்ளார்.

தமிழகம், மேற்குவங்கம், கேரளா உள்பட 12 மாநிலங்களில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தப்பணி நவம்பர் 4 முதல் ஒரு மாதம் நடத்தப்படும் என அண்மையில் தேர்தல் ஆணையம் அறிவித்தது. இதையடுத்து, அதற்கான பணியும் முடுக்கி விடப்பட்டது. இதற்கு திமுக, காங்கிரஸ் மற்றும் அதன் கூட்டணி கட்சிகள் உள்பட மேலும் சில கட்சிகள் தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. அதோடு மட்டும் அல்லாமல் அண்மையில் முதல்வர் ஸ்டாலின் தலைமையில் தலைமையில் நடைபெற்ற அரசியல் கட்சிகளின் கூட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணியை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்வது என முடிவு செய்யப்பட்டது.

இதையடுத்து, கடந்த 3ம் தேதி உச்சநீதிமன்றத்தில் திமுக வழக்கு தொடர்ந்தது. இதேபோல், மேலும் சில மாநில கட்சிகள் சார்பிலும் வழக்கு தொடரப்பட்டது. இதுஒருபுறம் இருக்க அதிமுக சார்பில் இடையீட்டு மனு தாக்கல் செய்ய அனுமதிக்க வேண்டும் என அக்கட்சி சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டது. மேலும், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தப் பணிக்கு பாஜக, அதிமுக உள்பட மேலும் சில கட்சிகள் தொடர்ந்து ஆதரவு தெரிவித்து வருகிறது.

தவெக இந்த விவகாரத்தில் மவுனம் காத்து வந்தது. இந்நிலையில், அந்த கட்சியும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தப் பணிக்கு எதிர்ப்பு தெரிவித்து மாநிலம் முழுவதும் வரும் 16ம் தேதி ஆர்ப்பாட்டம் நடத்த முடிவு செய்துள்ளது. இந்த முடிவை விஜய் எடுத்துள்ளதாக அக்கட்சியினர் தெரிவித்தனர். இதையடுத்து, தமிழகம் முழுவதும் அனைத்து மாவட்ட தலைநகரிலும் ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது. சென்னையை பொருத்தவரை ஆட்சியர் அலுவலகம் அருகே நடைபெற உள்ளது. இதற்கு போலீஸாரிடம் அனுமதியும் கேட்டுள்ளனர். தமிழகம் முழுவதும் நடைபெற உள்ள ஆர்ப்பாட்டத்தில் நடிகர் விஜய் ஏதாவது ஒரு மாவட்டத்தில் கலந்து கொள்ள முடிவு செய்துள்ளதாகக் கூறப்படுகிறது.

# மேகேதாட்டுவில் அணை கட்ட உச்ச நீதிமன்றம் அனுமதித்துள்ளதாக வெளியான தகவல் தவறு: துரைமுருகன் விளக்கம்

சென்னை, நவ.15-

மேகேதாட்டுவில் அணை கட்ட உச்ச நீதிமன்றம் அனுமதியளித்துள்ளதாக வெளியாகும் தகவல் களில் உண்மையில்லை என்று நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு: காவிரி ஆற்றின் குறுக்கே 67 டிஎம்சி கொள்ளளவு கொண்ட அணையை மேகேதாட்டுவில் அமைப்பதற்கான சாத்தியக்கூறு அறிக்கையை கர்நாடக அரசு தன்னிச்சையாகத் தயாரித்து, மத்திய நீர்வளக் குழுமத்துக்கு 2018ல் சமர்ப்பித்ததை எதிர்த்து தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தது.

இத்திட்டத்தை மேற்கொள்வதற்காகத் தேவைப்படும் சுற்றுச்சூழல் தாக்க அறிக்கைக்கான ஆய்வு வரம்புகளுக்கு ஒப்புதல் பெறுவதற்காக, மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தை கர்நாடக அரசு கடந்த 2020ம் ஆண்டு அணுகியபோது, மற்றொரு மனுவை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்து, தமிழக அரசு அதைத் தடுத்து நிறுத்தியது.

தொடர்ந்து, கர்நாடக அரசின் பட்ஜெட்டில் மேகேதாட்டு திட்டத்துக்கு ரூ.1,000 கோடியை ஒதுக்கியபோது, தமிழக அரசு எதிர்ப்பு தெரிவித்ததுடன், அனுமதி அளிக்கக்கூடாது என்று மத்திய அரசு, காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தை வலியுறுத்தி தமிழக சட்டப்பேரவையில் 2022 மார்ச் 21ல் தீர்மானம் நிறைவேற்றியது.

மேலும், பிரதமர் மோடியை முதல்வர் மு.க.ஸ்டாலின், 2022 மார்ச் 31, மே 26ம் தேதிகளில் சந்தித்தபோது, மேகேதாட்டு திட்டத்துக்கு அனுமதியளிக்கக் கூடாது என்று வலியுறுத்தினார். இந்த காலகட்டத்தில், காவிரி நீர்மேலாண்மை ஆணையத்துக்கு, கர்நாடக அரசின் கருத்துருவை பரிசீலிக்க அதிகாரம் உள்ளது என



மத்திய அரசு தெரிவித்தது. இதை எதிர்த்து 2022 ஜூன் 7ம் தேதி உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு மனு தாக்கல் செய்தது.

இவ்வாறு தமிழக அரசு எடுத்த பல்வேறு முயற்சிகளால் தற்போதுவரை காவிரி நீர் மேலாண்மை ஆணையக் கூட்டத்தில், மேகேதாட்டு அணை குறித்து விவாதிக்கப்படவில்லை. மேலும், தமிழக அரசு எடுத்த பல்வேறு தொடர் முயற்சிகளால், மேகேதாட்டு கருத்துருவை காவிரி நீர் மேலாண்மை ஆணையம், மத்திய நீர் வளக் குழுமத்துக்கு திருப்பியனுப்பியது.

இந்நிலையில், மேகேதாட்டு குறித்து பேசிய கர்நாடக முதல்வர், 202526ல் தமிழகத்துக்கு வழங்கப்பட வேண்டிய நீரின் அளவை விட கூடுதலாக நீர் வழங்கப்பட்டுள்ளதாகவும், மேகேதாட்டு அணையால் தமிழகத்துக்கு எந்த வித பாதிப்பும் ஏற்படாது என்றும் தெரிவித்துள்ள கூற்று எவ்விதத்திலும் ஏற்புடையதல்ல.

அதிக மழைப்பொழிவு இருக்கக்கூடிய ஆண்டுகளில் வேறுவழியின்றி தமிழகத்துக்கு கர்நாடக அரசு நீரைத் திறந்து விடுகிறதேயன்றி, வறட்சி ஆண்டுகளில் நமக்கு விகிதாச்சாரப்படி ஒதுக்கீடு செய்யப்பட்ட அளவுக்கான நீர் வழங்கப்படுவது இல்லை. இந்நிலையில், இந்த அணை தொடர்பான வழக்குகளை விசாரித்த உச்ச நீதிமன்றம், 'மேகேதாட்டு அணை கட்டுவதை எதிர்க்கும் தமிழக அரசின் கருத்துகளை காவிரி நீர் மேலாண்மை ஆணையம் மற்றும் மத்திய நீர்வளக் குழுமத்திடம் தெரிவிக்கலாம் என்றும், தமிழக அரசின் கருத்துகளைக் கேட்காமல் எந்தவொரு முடிவும் எடுக்கக்கூடாது என்றும் ஆணையிட்டுள்ளது.

அதன்படி, காவிரி நீர் மேலாண்மை ஆணையத்திடமும், மத்திய நீர் வளக் குழுமத்தின் முன்பும் தமிழக அரசு தனது வலுவான வாதங்களை முன்வைக்க உள்ளது. இதற்கிடையே, மேகேதாட்டுவில் அணை கட்டுவதற்கு உச்ச நீதிமன்றம் ஒப்புதல் அளித்துவிட்டதாக சில தவறான தகவல்கள் வெளிவருவது கண்டிக்கத்தது. இந்த தகவலில் எள்ளளவும் உண்மையில்லை.

காவிரி டெல்டா பாசன விவசாயிகளின் உரிமைகளை திமுக அரசு ஒருபோதும் விட்டுக்கொடுக்காது. காவிரியின் குறுக்கே புதிய அணை கட்டுவதற்கான கர்நாடக அரசின் அனைத்து முயற்சிகளையும் தமிழக அரசு ஆரம்பத்திலேயே தடுத்து நிறுத்தும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# எஸ்ஜஆர் படிவங்களை அதிமுகவினருக்கு கொடுக்க மாவட்ட ஆட்சியர்களுக்கு தடை: ஜெயக்குமார் குற்றச்சாட்டு



சென்னை, நவ.15-

எஸ்ஐஆர் படிவங்களை திமுகவினருக்கு மட்டுமே கொடுக்க வேண்டும் என்றும் அதிமுகவினருக்கு கொடுக்கக் கூடாது என்று மாவட்ட ஆட்சியர்களுக்கு திமுக அரசு வாய்மொழி உத்தரவு பிறப்பித்துள்ளதாகவும் அரசைக் கண்டித்து விரைவில் அதிமுக சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று முன்னாள் அமைச்சர் டி.ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் சென்னை ராயப்பேட்டையில் உள்ள கட்சி தலைமை அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் கூறியதாவது:

வாக்காளர் பட்டியலில் இறந்தவர்கள், இடம்பெயர்ந்தவர்களின் பெயர்கள் நீக்கப்பட்டு வெளிப்படையான வாக்காளர் பட்டியல் உருவாகும் என்பதற்காகதான் எஸ்ஐஆரை ஆதரித்தோம். ஆனால் தேர்தல் ஆணையத்தின் நல்ல நோக்கத்தை சிதைக்கும் வகையில் திமுக அரசு படிக்காதவர்களையும், திமுகவினரையும் பிஎல்ஓக்களாக நியமித்து, எஸ்ஐஆர் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

திமுகவினருக்கு மட்டுமே எஸ்ஐஆர் படிவம் கொடுக்க வேண்டும், அதிமுகவினருக்கு படிவங்களை கொடுக்க கூடாது என அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கு திமுக அரசு வாய்மொழி உத்தரவு பிறப்பித்துள்ளது. சென்னையில் மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், எஸ்ஐஆர் பணியில், ஜனநாயகத்தை சீர்குலைக்கும் வகையில், திமுக அரசுக்கு ஆதரவாக செயல்பட்டு வருகிறார்.

வீடு வீடாக படிவங்களை கொடுப்பதும், பூர்த்தி செய்த படிவங்களை பெறுவதும் பிஎல்ஓக்களின் வேலை. ஆனால் பிஎல்ஓக்களை மிரட்டி, படிவங்களை திமுகவினர் மொத்தமாக பெற்றும், ஒரே இடத்தில் அமர்ந்து, அவர்களுக்கு வேண்டியவர்களின் படிவங்களை பூர்த்தி செய்து கொடுக்கின்றனர். சென்னையில் பல இடங்களில் வீடு வீடாக செல்வதில்லை. சோழிங்கநல்லூர் பகுதியில் படிவங்கள் விநியோகம் முதல் நாள் 13 சதவீதம், 2வது நாள் 31 சதவீதமாக இருந்த நிலையில், 3வது நாள் 56 சதவீதமாக உயர்ந்துள்ளது. படிவங்களை விதிகளை மீறி வழங்கினால் தான் இப்படி விநியோகிக்க முடியும்.

சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதியில் ஒரு வாக்குச்சாவடியில் திமுகவின் பிஎல்ஏ 2 ஆக நியமிக்கப்பட்ட ஒரு நபர், இன்னொரு வாக்குச்சாவடியில் தேர்தல் ஆணையத்தின் பிஎல்ஓ ஆக நியமிக்கப்பட்டுள்ளார். அதிமுக வாக்குகளை நீக்க வேண்டும் என்பதற்காகவே திட்டமிட்டு பிஎல்ஓக்களாக படிக்காதவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். பிஎல்ஓ சார்பில் பெண் ஒருவர், முதல்வர் ஸ்டாலின் படம் போட்ட பையில் படிவங்களை வைத்துக் கொண்டு விநியோகம் செய்கிறார். காலில் அடிபட்டு நடக்க முடியாதவர்களை பிஎல்ஓ ஆக நியமித்துள்ளனர்.

இவர்களால் எப்படி வீடு வீடாக சென்று படிவங்களை கொடுக்க முடியும். சென்னை மட்டுமல்லாது தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் எஸ்ஐஆர் பணியில் விதிமீறல்கள் நடைபெற்று வருகின்றன. திட்டமிட்டு அதிமுக வாக்காளர்கள் புறக்கணிக்கப்படுகின்றனர். இது ஜனநாயகத்தை குழிதோண்டி புதைக்கும் செயல். இதை கண்டித்து அதிமுக சார்பில் விரைவில் ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது. இவ்வாறு அவர் கூறினார். அப்போது, மாவட்ட செயலாளர்கள் பாலகங்கா, விருகை ரவி, ஆதிராஜாராம், ஆர்.எஸ்.ராஜேஷ், டி.நகர் சத்யா உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# எஸ்ஜஆர் திருத்தம்: ஆன்லைனில் கணக்கீட்டு படிவத்தை நிரப்ப வழிகாட்டு முறை தமிழக தலைமை தேர்தல் அதிகாரி விளக்கம்

சென்னை, நவ.15-

இணையதளம் மூலம் கணக்கீட்டு படிவம் பூர்த்தி செய்வதற்கான வழிகாட்டுதல்களை தமிழக தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

இதுகுறித்து, தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் வெளியிட்ட செய்திக்குறிப்பு: 2002,2005 ன் வாக்காளர் பட்டியலில் வாக்காளர் தங்களது விவரங்களை https://www.voters.eci.gov.in/ என்ற இணையதளத்தில் பார்க்கலாம். இதுதவிர, இந்தியத் தேர்தல் ஆணையத்தின் இணையதள மான https://voters.eci.gov.in ல் கணக்கீட்டு படிவத்தை (Enum eration Form) நிரப்புவதற்கான வசதியை ஏற்படுத்தியுள்ளது. வாக்காளர்கள் தங்களது பதிவு செய்யப்பட்ட கைபேசி எண் அல்லது வாக்காளர் அடையாள அட்டை எண்ணைப் பயன்படுத்தி இணையதளம் மூலம் உள் நுழைய பதிவு செய்யப்பட்ட கைபேசி எண்ணுக்கு வரும் ஒருமுறை கடவுச்சொல்லை (OTP) உள்ளிட வேண்டும். பின்னர் அந்த இணைய பக்கத்தில் காட்டப்படும் "Fill Enumeration Form" என்ற இணைப்பினை தேர்வு செய்யலாம்.

இந்த வசதியை வாக்காளர் பட்டியலில் உள்ள பெயர் ஆதார் அட்டையில் உள்ள பெயருடன் பொருந்தும் வாக்காளர்கள் மட்டுமே பயன்படுத்த இயலும்.

வெற்றிகரமாக உள்நுழைந்த பிறகு, வாக்காளர் இணையப்பக்கத்தில் கோரப்படும் விவரங்களை நிரப்ப வேண்டும். பிறகு இணைய பக்கமானது மீஉவீரீஸீ பக்கத்துக்கு மாறும். அதன் பின்னர் பதிவு செய்யப்பட்ட கைபேசி எண்ணுக்கு ஒரு முறை கடவுச்சொல் அனுப்பப்படும். கடவுச்சொல்லை உள்ளிட்டவுடன், படிவம் வெற்றிகரமாக பதிவேற்றப்படும்.தங்களது கைபேசி எண்களை பதிவு செய்திருக்கும், மேலும் வாக்காளர் பட்டியல் மற்றும் ஆதார் பதிவுகளில் பெயர் பொருந்தி உள்ள வாக்காளர்கள் இந்த வசதியைப் பயன்படுத்திக் கொள்ளலாம். இவ்வாறு அதில் அவர் தெரிவித்துள்ளார்.




# திருப்பரங்குன்றம் மலையில் கார்த்திகை தீபம் ஏற்றப்படுமா? அரசு பதிலளிக்க ஐகோர்ட் உத்தரவு

மதுரை, நவ.15-

திருப்பரங்குன்றம் மலை உச்சியில் இருக்கும் தீபத்தூணில் கார்த்திகை தீபம் ஏற்ற உத்தரவிடக் கோரிய மனுவுக்கு, தமிழக அரசின் இந்து சமய அறநிலையத் துறை பதிலளிக்க உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மதுரை ஏழுமலையைச் சேர்ந்த ராம ரவிக்குமார், உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனு: முருகனின் அறுபடை வீடுகளில் முதல் படை வீடு திருப்பரங்குன்றம். திருப்பரங்குன்றம் மலை வழக்கில் திருப்பரங்குன்றம் மலை உச்சியில் உள்ள தீபத்தூணில் கார்த்திகை தீபம் ஏற்ற அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு கார்த்திகை திருவிழாவில் மலை உச்சியில் உள்ள தீபத்தூணில் அல்லாமல், பிள்ளையார் கோயில் தீப மண்டபத்தில் கார்த்திகை தீபம் ஏற்ற முடிவு செய்யப்பட்டு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இது சட்டவிரோதம், உயர் நீதிமன்ற உத்தரவுக்கு எதிரானது. இந்த ஆண்டு கார்த்திகை திருவிழாவில் திருப்பரங்குன்றம் மலையின் உச்சியில் உள்ள தீபத்தூணில் கார்த்திகை தீபத்தை ஏற்றவும், உச்சிப்பிள்ளையார் கோயில் தீப மண்டபத்தில் கார்த்திகை தீபம் ஏற்றுவது தொடர்பான அறிவிப்பை ரத்து செய்தும் உத்தரவிட வேண்டும் என்று மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த மனு நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் முன்பாக விசாரணைக்கு வந்தது. இந்து சமய அறநிலையத் துறை சார்பில், தேவையற்ற பிரச்சினைகளை தவிர்க்கும் நோக்கத்தில் திருப்பரங்குன்றம் மலையின் உச்சியில் தீபம் ஏற்றும் திட்டம் முடிவு செய்யப்படவில்லை எனக் கூறப்பட்டது. அப்போது நீதிபதி, யாரை கண்டு பயப்படுகிறீர்கள்? என கேள்வி எழுப்பினார். பின்னர் மனு தொடர்பாக அறநிலையத் துறை பதிலளிக்க உத்தரவிட்டு விசாரணையை நவ.19க்கு தள்ளிவைத்தார்.



# அரிச்சல்முனை பகுதியில் வந்தே மாதரம் பாடலின் 150வது ஆண்டு கொண்டாட்டம்

ராமேசுவரம், நவ.15-

தனுஷ்கோடி அரிச்சல்முனை பகுதியில் 'வந்தே மாதரம்' 150வது ஆண்டு விழா கொண்டாட்டம் தேசிய மாணவர் படையின் (என்சிசி) காரைக்குடி அணி சார்பில் நேற்று நடைபெற்றது. நாட்டின் தேசியப் பாடலான வந்தே மாதரத்தின் 150வது ஆண்டு விழா கொண்டாட்டத்தில், பொதுமக்கள், மாணவர்கள், இளைஞர்கள் அனைவரும் ஆர்வத்துடன் கலந்து கொள்ளுமாறு, பிரதமர் நரேந்திர மோடி அழைப்பு விடுத்திருந்தார்.

அதன்படி, ராமேசுவரம் அருகே தனுஷ்கோடி அரிச்சல்முனையில் வந்தே மாதரம் 150வது ஆண்டு விழா கொண்டாட்டம் தேசிய மாணவர் படையின் காரைக்குடி அணி சார்பில் நடைபெற்றது. என்சிசி திருச்சி குழு தளபதி கர்னல் வை.விஜய்குமார் தலைமை வகித்தார்.

ராமேசுவரம் அரசு உயர்நிலைப் பள்ளி, மரைக்காயர்பட்டினம் கேந்திரிய வித்யாலயா, அமிர்தா வித்யாலயம், காரைக்குடி செட்டிநாடு பொதுப்பள்ளி, மதுரை லேடி டோக் கல்லூரி ஆகிய கல்வி நிறுவனங்களைச் சார்ந்த மாணவ, மாணவிகள் கலந்துகொண்டனர்.

மேலும், கடற்படை, கடலோரக் காவல்படை, தமிழக காவல் துறையினர் ஆகியோர் விழாவில் அணி வகுத்தனர். விழாவின் நிறைவாக அனைவரும் சேர்ந்து வந்தே மாதரம் பாடலைபாடினர். இந்த நிகழ்ச்சியை, ராமேசுவரம் அரசு மேல்நிலைப் பள்ளி என்சிசி அலுவலர் பழனிசாமி ஒருங்கிணைத்தார்.

# எஸ்ஜஆர் படிவத்தை நிரப்ப திமுகவினர் உதவுவதில் என்ன தவறு? கேட்கிறார் அமைச்சர் கே.என்.நேரு




சென்னை, நவ.15-

எஸ்ஐஆர் படிவத்தை நிரப்பத்திணறும் மக்களுக்கு திமுகவினர் உதவுவதில் எந்தத் தவறும் இல்லை என்று அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்துள்ளார்.

திருச்சி மாவட்டத்தில் மொத்தம் 13 இடங்களில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சிகளில் பங்கேற்ற அமைச்சர் கே.என்.நேரு ரூ.406.63 கோடி மதிப்பிலான வளர்ச்சித் திட்டப் பணிகளை தொடங்கி வைத்தார். அதைத் தொடர்ந்து அமைச்சர் கே.என்.நேரு செய்தியாளர்களிடம் கூறியதாவது: எஸ்ஐஆர் கணக்கெடுப்புக்கு வாக்குச்சாவடி முகவர்கள் செல்லலாம் என தேர்தல் ஆணையமே அனுமதி கொடுத்துள்ளது. அதில் என்ன தவறு உள்ளது? மற்ற கட்சிகளின் வாக்குச்சாவடி முகவர்கள் வருவதை யாரும் தடுப்பதில்லை. படிவத்தை நிரப்பித் தர திமுகவினர் உதவுவதில் எந்த தவறும் இல்லை. அதிமுகவினர் உதவி செய்ய செல்லவில்லை என்றால் திமுகவினரும் செல்ல கூடாது என்று கூறினால் எப்படி? நாளை ஒருவேளை வாக்காளர் பட்டியலில் பெயர் இல்லை என்றால் ஆட்சியில் இருப்பவர்கள் ஏன் இதை கவனிக்கவில்லை என்று எங்கள் மீதுதான் குற்றம் சாட்டுவார்கள். நாங்கள் சரியாகத் தான் இப்பணிகளை செய்து வருகிறோம். மத்திய அரசு ஜல்ஜீவன், நூறு நாள் வேலை திட்டம், மெட்ரோ, ஜிஎஸ்டியில் பங்கு என எதற்கும் நிதி ஒதுக்குவதில்லை. ஜல்ஜீவன் திட்டத்தின் கீழ் 12 திட்டங்கள் நிதி ஒதுக்காததால் செயல்படுத்த முடியாமல் உள்ளது. அவர்கள் திட்டங்கள் கொடுத்தால் நாங்கள் ஏன் வேண்டாம் என்று சொல்கிறோம்.

'திமுக நல்லவர் போல நடிப்பதை நாடே பார்த்து சிரிக்கிறது' என தவெக தலைவர் விஜய் கூறுகிறார். விஜய்க்கு வேண்டுமானால் திமுக ஆட்சி, நல்லவர்கள் போல வேஷம் போடுவது போல தெரியலாம். ஆனால் நாட்டு மக்களுக்கு, திமுகவும், திமுக ஆட்சியும், முதல்வரும் நல்லவர்களாகவே தெரிகிறார்கள். திமுக நல்லவர் போல வேஷம் போடவில்லை. உண்மையாக நல்லவர்களாக இருப்பதால்தான் அனைத்து தரப்பு மக்களுக்குமான திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. மக்கள் அனைவரும் முதல்வரை வரவேற்கிறார்கள். 2026 சட்டப்பேரவைத் தேர்தலிலும் மீண்டும் திமுகவே ஆட்சிக்கு வரும். 210 தொகுதிகளில் வெல்வோம் என கூறும் அதிமுகவினர் மீதி உள்ள 20 தொகுதிகளை ஏன் விட்டுவிட்டார்கள் என்று தெரியவில்லை. திருப்பதி கோயிலுக்கு ரூ.44 லட்சம் நன்கொடை வழங்கியது குறித்து விமர்சிக்கிறார்கள். நான் பணம் கட்டுகிறேன். ஏன் கட்ட கூடாதா? நான் திருப்பதி கோயிலுக்கு ரூ.44 லட்சம் நன்கொடை வழங்கியது குறித்து விமர்சனம் செய்பவர்கள் செய்யட்டும். விமர்சனம் செய்பவர்கள் எல்லாரும் என்னை நல்லவன் என்று சொல்வார்களா? என்றார்.

# 3 அரசு ஊழியர்கள் உட்பட 15 பேரிடம் விசாரணை



ஸ்ரீநகர், நவ.15-

ஒயிட் காலர் தீவிரவாத சதி திட்டம் தொடர்பாக காஷ்மீரில் 3 அரசு ஊழியர்கள் உட்பட 15 பேரை பிடித்து போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

டெல்லி கார் குண்டு வெடிப்பு சம்பவத்தில் ஜம்மு காஷ்மீரைச் சேர்ந்த டாக்டர்கள் ஈடுபட்டுள்ளது தெரியவந்துள்ளது. இது ஒயிட் காலர் தீவிரவாத சதி என அழைக்கப்படுகிறது. இது தொடர்பாக டாக்டர்கள் உட்பட 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த வழக்கை என்ஐஏ விசாரித்து வருகிறது.

டெல்லி சம்பவத்தை அடுத்து, காஷ்மீர் முழுவதும் போலீஸார் உள்ளிட்ட பாதுகாப்புப் படையினர் தீவிர சோதனை நடத்தி வருகின்றனர். இது வரை சந்தேகத்தின் பேரில் 200 பேரிடம் விசாரணை நடத்தி உள்ளனர். இந்நிலையில், அனந்த்நாக், புல்வாமா, குல்காம் உள்ளிட்ட மாவட்டங்களில் நேற்று நடத்திய சோதனையின்போது 3 அரசு ஊழியர்கள் உட்பட 15 பேரை பிடித்து விசாரித்து வருகின்றனர். அவர்களிடமிருந்து சில டிஜிட்டல் சாதனங்கள் மற்றும் சில ஆவணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. இந்த தகவலை காவல் துறை உயர் அதிகாரிகள் வட்டாரம் தெரிவித்துள்ளது.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000